2nd August 1966]

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) & (இ) சபை முன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வை. சங்கரன் :** சார், இந்த காற்று மில்களை ஏற்படுத்தினால் நாகப்பட்டினத்திற்கு உதவியாக இருக்கும் என்று இந்தக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாகப்பட்டினத்தில் பாசன வசதி செய்வதற்காவது அங்கே அதிகபட்ச யந்திரங்களை அமைக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** எல்லாவற்றையும் பார்த்து அபிப்பிராயம் சொல்லியிருக்கிறார்கள். பரீட்சார்த்தமாக தஞ்சாவூர் ஜில்லாவிலே திருவாரூரிலும், இராமநாதபுரம் ஜில்லாவிலே உச்சிப்புளியிலும் காற்றாடி யந்திரங்களை வைத்துப் பார்க்கலாம், பிறகு அதைப் பற்றி முடிவு செய்யலாம் என்று இருக்கிறது.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, சபை முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் இரண்டு-மூன்று அபிப்பிராயங்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த இரண்டு-மூன்று அபிப்பிராயங்களை சர்க்கார் பரிசீலித்ததா ? அவை எந்த எந்த இடங்களுக்குப் பொருந்தும் என்று சர்க்கார் ஏதாவது அறிவிக்க முடியுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்போது அந்தத் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லலாம்.

*Prevention of wind erosion*

*27 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state the measures proposed to be taken to prevent wind erosion and also the action of high velocity winds depositing soil particles in cultivable lands situated near Western Ghats in Bodinayakanur, Madurai district?

**கனம் திரு. பூ. கக்கன் :** மதுரை மாவட்டத்தில், போடிநாயக்கனூர் பகுதியில், காற்று அரிப்பையும், பெருங்காற்று வீச்சினால் ஏற்படும் விளைவுகளையும் தடுப்பதற்காகவும், மண்மேடுகள் பயிர் நிலங்களுக்குப் பரவவொட்டாமல் தடுக்கிற ஒரு திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 36 மைல் தூரத்திற்குக் காற்றுத் தடைகள் எழுப்பப்பட்டுள்ளன. ஆண்டு தோறும் மேலும் மரங்களை வைத்துப் பயிரிடுவதன் மூலம் இக் காற்றுத் தடைப்பகுதி விரிவாக்கப்பட்டு வருகிறது.

இந்த வட்டாரத்தில் பாதிக்கப்பட்டுள்ள பெரும் பரப்பைக் கருத்தில் கொண்டு, போடிநாயக்கனூர் பகுதியில் புழுதிப் புயல்களால் மண்மேடிட்டுப் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளைப் பரிசீலனை செய்வதற்கும், காற்று வீச்சினால் மண் அரிப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்குரிய விரிவான திட்டங்களையும் மதிப்பீடுகளையும் தயாரிப்பதற்கும் அண்மையில் ஒரு திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அது நிறைவேறி வருகிறது.

---

122–125-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[2nd August 1966

**திரு. வி. எஸ். எஸ். மணி:** சார், போடிநாயக்கனூரிலிருந்து தேவாரம் வரை 12 மைல் சாலை வருகிறது. அது பஸ் போக்கு வரத்து இருக்கக் கூடிய சாலை. ஆடி மாதத்தில் காற்றினால் சாலை மணலால் மூடப்பட்டு வருகிறது. அங்கே மணலை அகற்ற ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறதா? இல்லை என்றால் அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** காற்றினால் ஹைவேசில் மண் விழுந்தால் அதை அப்புறப்படுத்தத் தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. வை. சங்கரன்:** சார், இந்த இடமானது மிகவும் கஷ்டத்திற்குள்ளாகி இருப்பதால், இதை எவ்வளவு சீக்கிரத்தில் நிறைவேற்ற முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** வேலை நடந்துகொண்டுதான் வருகிறது. எவ்வளவு தூரம் கட்டுப்படுத்த முடியுமோ அதற்கு அதிகமாகச் செடிகளை வைத்துக் காற்றின் வேகத்தைத் தடுத்தால்தான் முடியும்.

### தீயணைப்புத்துறைத் தொழிற்கூடம், சென்னை

* 28 **கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத் தலைநகரில் இருக்கின்ற தீயணைக்கும் படையினரால் வைத்து இயங்கிவருகின்ற தொழிற்கூடத்தை (ஒர்க்ஷாப்பை) கலைத்துவிட்டு நமது மாநில சர்க்கார் வைத்து நடத்தும் ட்ரான்ஸ்போர்ட்டு ஒர்க்ஷாப்பில் சேர்த்துக்கொள்வதற்கு செயற்குறிப்புகள் ஏதேனும் உள்ளனவா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

**கனம் திரு. பூ. கக்கன்:** (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழவில்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, அரசாங்கத்தால் நடத்தப்படுகிற டிரான்ஸ்போர்ட் ஒர்க்ஷாப் ஒன்று இருக்கும்போது எதற்காக இது தனியாக இருக்கவேண்டும்? டிரான்ஸ்போர்ட் ஒர்க்ஷாப் இல்லாதபோது எம். எஃப். எஸ். ஒர்க்ஷாப் தவிர்க்க முடியாத ஒன்று; இப்போது அது தேவையில்லாத ஒன்று. அரசாங்க டிரான்ஸ்போர்ட் ஒர்க்ஷாப்பில் உள்ள தொழிலாளர்களுக்கு எல்லாச் சலுகைகளும் கொடுக்கப்படுகின்றன; எம். எஃப். எஸ். ஒர்க்ஷாப்பில் சலுகைகள் கொடுக்கப்படவில்லை. இந்த ஒர்க்ஷாப்பை டிரான்ஸ்போர்ட் ஒர்க்ஷாப்போடு சேர்த்துவிடலாம் என்று தான் கருதுகிறேன்; அமைச்சர் அவர்கள் என்ன கருதுகிறார்கள்?

**கனம் திரு. பூ. கக்கன்:** கனம் அங்கத்தினர் கருதுவதாலேயே ஒர்க்ஷாப்பை இணைக்க முடியாது. அவசரத்திற்கு அவ்வப்போது ரிப்பேர் செய்வதற்கு இந்த ஒர்க்ஷாப் தேவைப்படுகிறது என்ற காரணத்தினால் இது இணைக்கப்படவில்லை.